குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.13/2020

அ.சா.4

2025–ம் ஆண்டு நவம்பர் 12–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனியம்மாள் | தொழில் | |
| கணவர் பெயர் | சேட்டு | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.10 மணி,

Accused Murugan present. Advocate Mr.Arunachalam present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பூசாரிப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், பூசாரிப்பட்டி இந்திரா நகரில், தருமபுரி – சேலம் செல்லும் சாலையில் இந்திரா சிலை அருகே, காலை 05.00 மணியளவில் சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தபோது, மாதம்மாள் அடிப்பட்டுக் கிடந்தார். அவர் ஏதோ வண்டியில் அடிப்பட்டதாக சொன்னார்கள்.

2. எந்த வண்டி மோதி அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. மாதம்மாள் அதன்பின்பு, இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 23.03.2019 ஆம் தேதி காலை 05.45 மணியளவில் சேலம் – தருமபுரி சாலையில் பூசாரிப்பட்டி இந்திரா நகர், இந்திரா காந்தி சிலை அருகே சாலையின் ஓரமாக மாதம்மாள்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.12 17:40:13 +0530

நின்று கொண்டிருந்தபோது, அதே சாலையில் சேலம் – தருமபுரி நோக்கி ஆஜர் எதிரி டி.என்.30 பி.டி.7164 என்ற பதிவெண் கொண்ட ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டிவந்து மாதம்மாள் என்பவரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு, மேற்கண்ட சங்கதிகளை விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.18 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.12 17:40:17 +0530